**செ.வெ.எண்.11** **நாள்.06.11.2017.**

**மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒற்றை சாளர முறையில் நலத்திட்ட உதவிகள் வழங்கிட சிறப்பு முகாம் நடைபெறுதல் - மாவட்ட ஆட்சியர் திரு சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் அறிவிப்பு**

திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஏற்கனவே தேசிய மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை பெற்றவர்களுக்கு ஒற்றை சாளர முறையில் நலத்திட்டங்கள் வழங்கிட ஏதுவாக சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது என திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் **திரு சந்தீப் நந்தூரி இ.ஆ.ப** அவர்கள் தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

அதன்படி, **மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி** வழியாக தேசிய மாற்றுத்திறனாளிகள் நிதி வளர்ச்சி கழகத்தின் **(NHFDC)** மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் பெறவும், **மாவட்ட தொழில் மையம்** மூலம் **UYEGP** மற்றும் **PMEGP** யில் மன்யத்துடன் கடன் பெறவும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் சுயவேலைவாய்ப்பு வங்கி கடன், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தல், வேலைவாய்ப்பற்ற நிவாரணத்தொகை, வேலைவாய்ப்புத் திட்டம், வருவாய்த்துறை மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, உழவர் பாதுகாப்பு அட்டை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் இந்திர நினைவு குடியிருப்பு திட்டம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் வங்கி கடன் மான்யம், நலவாரிய பதிவு, பாதுகாவலர் சான்று, பாதுகாவலருடன் செல்ல பேருந்து கட்டண சலுகை உதவி உபகரணங்கள், போன்ற திட்டங்களில் மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் **சிறப்பு முகாம்** நடைபெறவுள்ளது.

எனவே இம்முகாமில் ஏற்கனவே மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெற்றவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை, (புதியது மற்றும் பழையது) ஆதார் அட்டை, போட்டோ ஆகியவற்றின் அசல் மற்றும் நகல்கள் 2 செட் ஆகியவற்றுடன் முகாமிற்கு வருமாறும், மேலும் கல்வி பயின்று வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யாத மாற்றுத்திறனாளிகள் தங்கள் கல்வி சான்றுகளுடனும், ஒரு வருடத்திற்கு மேல் பதிவு செய்து வேலையில்லாமால் உள்ள மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேலைவாய்ப்பு பதிவு அட்டை மற்றும் போட்டோவுடன் வர கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகள் அந்தந்த பகுதிகுட்பட்ட முகாம்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் **திரு சந்தீப் நந்தூரி இ.ஆ.ப** அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

முகாம் விவரம்

| வ.எண் | ஊராட்சி ஒன்றியம் | இடம் | நாள் |
|---|---|---|---|
| 1 | சேரன்மாதேவி | வட்டார வளர்ச்சி அலுவலகம், சேரன்மாதேவி | 14.11.2017 |
| 2 | களக்காடு | வட்டார வளர்ச்சி அலுவலகம், களக்காடு | 15.11.2017 |
| 3 | இராதாபுரம் | வட்டார வளர்ச்சி அலுவலகம், இராதாபுரம் | 16.11.2017 |
| 4 | நாங்குநேரி | வட்டார வளர்ச்சி அலுவலகம், நாங்குநேரி | 17.11.2017 |
| 5 | கடையம் | வட்டார வளர்ச்சி அலுவலகம், கடையம் | 21.11.2017 |
| 6 | அம்பாசமுத்திரம் | வட்டார வளர்ச்சி அலுவலகம், அம்பாசமுத்திரம் | 22.11.2017 |
| 7 | குருவிகுளம் | வட்டார வளர்ச்சி அலுவலகம், குருவிகுளம் | 23.11.2017 |
| 8 | பாப்பாக்குடி | வட்டார வளர்ச்சி அலுவலகம், பாப்பாக்குடி | 24.11.2017 |
| 9 | வாசுதேவநல்லூர் | வட்டார வளர்ச்சி அலுவலகம், வாசுதேவநல்லூர் | 28.11.2017 |
| 10 | சங்கரன்கோவில் | வட்டார வளர்ச்சி அலுவலகம், சங்கரன்கோவில் | 29.11.2017 |
| 11 | மானூர் | வட்டார வளர்ச்சி அலுவலகம், மானூர் | 30.11.2017 |
| 12 | மேலநீலிதநல்லூர் | வட்டார வளர்ச்சி அலுவலகம், மேலநீலிதநல்லூர் | 01.12.2017 |
| 13 | செங்கோட்டை | வட்டார வளர்ச்சி அலுவலகம், செங்கோட்டை | 05.12.2017 |
| 14 | தென்காசி | வட்டார வளர்ச்சி அலுவலகம், தென்காசி | 06.12.2017 |
| 15 | வள்ளியூர் | வட்டார வளர்ச்சி அலுவலகம், வள்ளியூர் | 07.12.2017 |
| 16 | ஆலங்குளம் | வட்டார வளர்ச்சி அலுவலகம், ஆலங்குளம் | 08.12.2017 |
| 17 | கீழப்பாவூர் | வட்டார வளர்ச்சி அலுவலகம், கீழப்பாவூர் | 12.12.2017 |
| 18 | கடையநல்லூர் | வட்டார வளர்ச்சி அலுவலகம், கடையநல்லூர் | 13.12.2017 |
| 19 | பாளையங்கோட்டை | வட்டார வளர்ச்சி அலுவலகம், பாளையங்கோட்டை | 14.12.2017 |

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.